# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **09 பெப்ருவரி 2020** | **பொதுக்காலம் 5 ஆம் ஞாயிறு** | **முதல் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

பொதுக் காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாடத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்களே! உங்களை அன்புடனும் மகிழ்வுடனும் வரவேற்கிறோம்.

இன்றைய வாசகங்கள் நம்மைச் சுவையுள்ளவர்களாகவும், அனைவருக்கும் ஒளியாகவும் இருக்க அழைக்கின்றது. திருமுழுக்கின் போது நாம் உவர்ப்புடையவர்களாக உப்பைச் சுவைப்பதின் மூலமாக மாற்றப்படுகிறோம். கடவுளின் அன்பு, அமைதி, மகிழ்ச்சி, இன்னும் பல நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பலன் கொடுக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் கடவுளின் வாழ்வான அன்பு, அமைதி, மகிழ்வு அனைத்திற்கும் இன்னும் சுவைக் கூட்டி நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

உப்பின் உவர்ப்புத் தன்மை மாறினால் அதை என்ன செய்வது என்று இயேசு கேட்கிறார். அதற்குப் பதில், நம்மை மீண்டும் உப்பாகக் கடவுள் மாற்ற நாம் அனுமதிக்க வேண்டும். திருமுழுக்கில் நாம் கையில் மெழுகுவர்த்தியைப் பெறும் போது அனைவருக்கும் ஒளியாக இருக்கிறோம். இயேசு நம்மை ஒளியாக இருக்க அழைக்கிறார். அது மற்றவர்களுக்குத் தெரியும்படியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மற்றவர்களின் வாழ்வில் இயேசுவின் பிரசன்னத்தைக் கொண்டுவர, நாம் இயேசுவின் ஒளியை நம்மில் ஒளிர விட வேண்டும். இருள் நடுவே நம் ஒளி உதிக்கவேண்டும். நற்செயல்களால் கடவுளுடன் இணைந்திடுவோம். இவரின் ஞானத்தையும் வல்லமையையும் பெற்றிட இத்திருப்பலியில் உப்பாய் ஒளியாய் கலந்திடுவோம் வாரீர்.

பங்குத்தந்தை அருட்திரு மைக்கல் சீத்தாராம் மற்றும்
உதவிப் பங்குத் தந்தையர்கள் சார்பாக அனைவருக்கும்
**நமது லூர்து அன்னை ஆலயத் திருவிழா**
**வாழ்த்துக்களைத்** தெரிவித்துக் கொள்கிறோம்.







## மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் சேகரிப்பு

கடந்த ஆண்டு குருத்து ஞாயிறின் போது மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் விபூதிப்புதன் (26-02-2020) அன்று எரித்துப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், உங்கள் குருத்தோலைகளை இன்று முதல் ஆலயத்தில் வைக்கப்படவுள்ள சேகரிப்புப் பெட்டியில் போடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 16-02-2020, ஞாயிறு மதியம் 2:30 மணி**




ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (02-02-2020) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4751.50
பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 6870.00
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## விபூதிப் புதன் (26-02-2019) திருப்பலி நேரங்கள்




மதியம் 12:30 மணி மற்றும் மாலை 6:30 மணி (ஆங்கிலம்)
இரவு 8:00 மணி (தமிழ்)

திருப்பலியில் கலந்து கொண்டு இறையாசீருடன் அருளின் காலமான தவக்காலத்தை ஆரம்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்று ஒரு சந்தியும், சுத்த போசனமும் அனுசரிக்கப்பட வேண்டிய நாள்**

தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இரவு **8 மணிக்குத் தமிழில்** சிலுவைப் பாதையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.



## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 58: 7-10 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 112: 4-5, 6-7, 8a, 9 |
| **பதிலுரை: ஆண்டவர்க்கு அஞ்சுவோர் இருளில் ஒளியென மிளிர்வர்** | |
| **இரண்டாம் வாசகம்:** | 1 கொரிந்தியர் 2:1-5 |
| **வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! “உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்“ என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.** | |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு 5:13-16 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

